2024 ஜூன் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்ட மாவட்டம். தற்போதுதான் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டிருக்கிறது. சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலே கூடுதலாக ஒரு மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைய வேண்டுமென்று சொன்னால், அதற்கு அந்த மாவட்டத்திற்காக பொறுப்பிலிருக்கக்கூடிய உயர் நீதிமன்ற நீதிபதி மற்றும் அந்த மாவட்ட நீதிபதி ஆகியோரால் உயர் நீதிமன்றத்திற்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டால் அந்த பரிந்துரையின் அடிப்படையிலே அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம், பேரவைத் தலைவரிடமிருந்து ஒரு கேள்வி இருக்கிறது. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், தாங்களும் திசையன்விளை தாலுகா, திசையன்விளையில் ஒரு Munsif-cum-Judicial Magistrate Court அமைக்க அரசாணை வெளியிட்டிருக்கிறீர்கள். எப்போது அது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மானாமதுரையில் நடைபெற்ற combined court building திறப்பு விழா நிகழ்ச்சியிலே அங்கிருக்கக்கூடிய நீதியரசர்களிடத்திலே எங்களுடைய சட்டப் பேரவைத் தலைவர், எங்கள் துறை சார்ந்த மானியக் கோரிக்கை வரும்பொழுது அதைக் கேட்பார்கள் என்ற செய்தியை

அவர்களிடத்தில் தெரிவித்திருக்கின்றேன். எனவே, மிக விரைவிலே உயர் நீதிமன்றம், அங்கே அதைத் திறப்பதற்கான வழிகளைச் செய்யும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான அனுமதியைத் தந்து, எங்களுக்கான நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, அதில் எந்தவிதமான சிக்கலும் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், உட்கார்ந்துகொண்டே பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் சபாநாயகரே கேள்வி கேட்கிற ஒரு புதுமையை இன்றைக்குத்தான் நான் பார்த்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. எனக்கும் தொகுதி மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். தொகுதிக்காக கேட்க வேண்டுமல்லவா!*

வினா வரிசை எண்கள் 53, 54 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

55—

பருத்தி நூற்பாலை

***7438—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு பகுதியில் பருத்தி நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2024 ஜூன் 21]

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே இயங்கி வந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் பல்வேறு காரணங்களால் முற்றிலுமாக செயலிழந்தன. தற்போது இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் முக்கியத் திட்டங்களான வேட்டி, சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் துணிகள் விநியோகம் செய்யத் தேவையான நூலை வழங்கி வருகின்றன. இந்நிலையில், செங்கம், தண்டராம்பட்டு பகுதியில் பருத்தி நூல் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு என்பது கல்வராயன்மலை அடிவாரத்தில் இருக்கிற ஓர் ஒன்றியம். பக்கத்திலே இருக்கின்ற தருமபுரி மாவட்டத்தையும், கிருஷ்ணகிரி மாவட்டத்தையும் இணைக்கின்ற பகுதி. அந்தப் பகுதிகளெல்லாம் வானம் பார்த்த பூமி. பருத்திதான் அதிகமாக நடுகின்றோம். எனவே, எத்தனை நூற்பாலைகள் நிறுத்தப்பட்டிருந்தாலும், புதிதாக ஒரு நூற்பாலையை நவீன வசதிகளோடு தண்டராம்பட்டு, அரூர், ஊத்தங்கரை தொகுதிகளை உள்ளடக்கி ஓர் இடத்திலே அரசு அமைக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி,: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 நூற்பாலைகள் பல்வேறு காரணங்களினாலே முற்றிலுமாக செயலில் இல்லை. சட்டப்பூர்வ ஆய்வு மற்றும் அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் பேரில் செயலிழந்த 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983, பிரிவு 137 (2b)-ன்கீழ் கலைக்கப்பட்டன. அதுமட்டுமல்லாது, மத்திய அரசுமூலம் செயல்பட்ட கிட்டத்தட்ட*